உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

ஒரு தமிழ்ப் பத்திரிகை.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-௩௩] தாது௵ ஆவணிமீ [பகுதி-௰.
Vol. XXXIII. *August-September 1936.* No. 10.

## உள்ளுறை.

நியாயப்பிரவேசமணிமேகலை:—பத்திராசிரியர். ௨௫௩—௨௬௪
கம்பராமாயண இன்கவித்திரட்டு:- } ஸ்ரீமத். ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியார் ௨௬௫—௨௬௮
ஒலியெழுத்துக்கும் உருவமுண்டு:— } ,, வித்வான் T.R. வீரராகவையங்கார், ௨௬௯—௨௭௨
ரமாமணி:—ஸ்ரீமத். V. S. ராமஸ்வாமி சாஸ்திரியார் B.A. B.L. ௨௭௩—௨௭௫
மதிப்புரை:— ௨௭௬
சிராமலைக்கோவை:- (குறிப்புரையுடன்) } ஸ்ரீமத். மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி - டாக்டர் உ. வே. சாமிநாதையர். 105—112
சூடிக்கொடுத்தநாய்ச்சியார் தோத்திரப்பாமாலை மூலமும் உரையும்; முன்னுரைமுதலிய:— } ஸ்ரீமத். ரெ. அப்புவையங்கார். 57—60
1—6
ஆங்கிலத்தமிழ்ப்பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு:— 1—10
தனித்தமிழ்ப்பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு:— 11

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] [தனிப்பிரதி அணா—8.
வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.

1936.

Printed by Srimathu R. SHANMUGA RAJESWARA NAGANATHA SETHUPATHY AVL., and
Published by THIRU. NARAYANA IYENGAR at the Tamil Sangam Power Press,
No 54, New Jail Road, Madura.

# ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும், மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவைசம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,

மானேஜர்.

---

## மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

### I. சங்கப்பிரசுரம்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | ஞானாமிர்த மூலமும் உரையும் ... ... | 1 | 0 | 0 |
| 2. | சைவமஞ்சரி ... ... ... | 1 | 8 | 0 |
| 3. | யாப்பணியிலக்கணங்கள் ... ... ... | 0 | 10 | 0 |
| 4. | வைத்தியசாரசங்கிரகம் ... ... ... | 5 | 0 | 0 |
| 5. | பன்னூற்றிரட்டு ... ... ... | 3 | 0 | 0 |
| 6. | மகாபாரதம் அரும்பதவுரையுடன் ... ... | 4 | 0 | 0 |
| *7. | தோத்திரத்திரட்டு ... ... ... | | | |
| *8 | தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய. முதற்பாகம். | 6 | 0 | 0 |
| * | ஷை இரண்டாம்பாகம் ... ... ... | 4 | 8 | 0 |
| | ஷை மூன்றாம்பாகம் ... ... ... | 5 | 0 | 0 |
| *9. | அபிதானசிந்தாமணி ... ... ... | | | |
| 10. | தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய) ... | 1 | 12 | 0 |
| 11. | திருவருணைக்கலம்பகம் ... ... ... | 0 | 6 | 0 |
| 12. | அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ் ... ... | 0 | 8 | 0 |
| 13. | கலைசைச்சிலேடைவெண்பா ... ... ... | 0 | 6 | 0 |
| 14. | தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி .... | 1 | 4 | 0 |
| 15. | திருவாரூர் நான்மணிமாலை ... ... ... | 0 | 4 | 0 |
| | பன்னூற்றிரட்டு (செலக்ஷன்) ... ... | 0 | 4 | 0 |
| | திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன ... | 0 | 1 | 0 |

---

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-௩௩] தாது௵ ஆவணிமீ [பகுதி-௧௦.

Vol. XXXIII. August-September 1936. No. 10.

## நியாயப்பிரவேச மணிமேகலை.

[௨௩௨-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

### 3. உபயாவ்யாவிருத்தம்.

நியாயப்பிரவேசத்தில், சாதர்மியதிருஷ்டாந்தாபாசத்துள் உபயாசித்தம் என்பதைமட்டும் 'சன்னு', 'அசன்னு' என இரு வகையாகப் பகுத்துக்கொண்டு 'சன்னு' என்பதனை வித்யமானோப யாசித்தம் என்றும், 'அசன்னு' என்பதனை அவித்யமானோபயாசித் தம் என்றும் வேறுவேறுபெயரிட்டுத் தனித்தனி உதாரணங்காட்டி விளக்கலாயிற்று. அவ்வாறே வைதர்மியதிருஷ்டாந்தாபாசத்துள் ளும் உபயாவியாவிருத்தம் என்பதனையும் சன்னு, அசன்னு எனப் பகுத்து அவற்றை முறையே வித்யமானோபயாவியாவிருத்தம், அவித்ய மானோபயாவியாவிருத்தம் என வேறுவேறுபெயரிட்டுத் தனித்தனி உதா ரணங்காட்டிவிளக்காமல் உபயாவியாவிருத்தம் என்னும் போதுப்பெயர் கோண்டு ஒரே உதாரணம் காட்டப்பட்டிருக்கிறது.

மணிமேகலையில் அவ்வாறின்றி உபயாசித்தமென்னும் அவ் வைதர்மியதிருஷ்டாந்தாபாசமானது உண்மையினுபயாவியாவிருத்தி என்றும் இன்மையினுபயாவியாவிருத்தியென்றும் இரண்டாகப்பகுக்கப் பட்டுத் தனித்தனி உதாரணங்காட்டி விளக்கப்பட்டிருக்கிறது. இதுவும் ஒரு முதன்மையான வேறுபாடு.

இங்ஙனம் கூறியவாறு நியாயப்பிரவேசத்தில் உபயாவியாவிருத் தம் என்னும் திருஷ்டாந்தப்போலிநிரூபணம் வருமாறு:—

*

'𑌉𑌭𑌯𑌾𑌵𑍍𑌯𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌃। 𑌆𑌕𑌾𑌶𑌵𑌦𑌿𑌤𑌿।
𑌤𑌸𑍍𑌯𑍈𑌵𑌵𑌾𑌦𑌿𑌨𑌂𑌵𑍃𑌤𑍍𑌤𑌿।
𑌤𑌤𑍋 𑌨𑌿𑌤𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌮𑍂𑌰𑍍𑌤𑌤𑍍𑌵𑌂𑌚 𑌨𑌵𑍍𑌯𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌂।
𑌨𑌿𑌤𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌮𑍂𑌰𑍍𑌤𑌤𑍍𑌵𑌾𑌦𑌾𑌕𑌾𑌶𑌸𑍍𑌯𑍇𑌤𑌿॥'

இதன்பொருள்: 'உபயாவியாவிருத்தமாவது: ஆகாசம் உள்ளது என்னும் கொள்கையுடையோனைநோக்கி ஆகாசம்போலும் என்பது; அவ்வாகாசத்தினின்றும் நித்தியத்தன்மையும் அமூர்த்தத் தன்மையும் ஒழிந்தனவல்ல; ஆகாசத்துக்கு நித்தியத்தன்மையும் அமூர்த்தத்தன்மையும் உண்மையால்' என்பதாம்.

இதன்கண்ணும் திருஷ்டாந்தவுறுப்புக்களாகிய பக்ஷ சாத்திய சாதந தர்ம வசனங்கள் இவையெனச் சொல்லப்படவில்லை. அவை, 'சத்தம் நித்தம்; அமூர்த்தமாதலால்' என்று குறிப்பாற் கொள்ளத் தக்கன.

மணிமேகலையுள் இத்திட்டாந்தாபாசத்தை, பக்ஷ சாத்திய சாதந தர்ம வசனங்களுடன் உதாரணங்காட்டி விளக்கத் தொடங்கி, முதலில் உபயாவியாவிருத்தியின் இலக்கணமும் அதன் வகையும் சொல்லப்படும். அவை வருமாறு:—

'உபயா வியாவிருத்தி காட்டப் பட்ட
வைதன் மியதிருட் டாந்தத்தி னின்று
சாதந சாத்தியங்கண் மீளாமை யன்றியும்
உண்மையி னுபயாவி யாவி ருத்தி
இன்மையி னுபயாவி யாவி ருத்தி
எனவிருவகை' (௪௨௫-௩௦)

என்பது.

இதன்பொருள்: 'உபயாவியாவிருத்தி என்னும் திருஷ்டாந்தப் போலியின் பொதுவிலக்கணம் எங்ஙனமெனில் "வாதியாற் காட்டப்பட்ட வைதர்மியதிருஷ்டாந்தத்தில்நின்றும் சாத்திய சாதநதர்மங்கள் இல்லனவாகாமல் உள்ளனவாகவேயிருத்தல்" அல்லாமலும், திருஷ்டாந்தப்பொருள் உள்ளனவாயிருத்தல்பற்றி உண்மையினுபயாவியாவிருத்தி என்றும், திருஷ்டாந்தப்பொருள்

இல்லனவாயிருத்தல்பற்றி இன்மையினுபயாவியாவிருத்தியென்றும் இருவகையாகப் பகுக்கப்படும்' என்றவாறு.

உபயம் என்னும் தொகைக்குறிப்பால் சாதநசாத்தியதர்மங்கள் உணர்த்தப்பட்டன. அவ்வியாவிருத்தி - வேறுபாடில்லாமை. சாதநசாத்தியங்களான உபயதர்மங்களாலும் சாதர்மியதிருஷ்டாந்தத்தினின்றும் வேறுபாடில்லாத திருஷ்டாந்தம் உபயாவியாவிருத்தியெனப்பட்டது. சாதர்மிய திருஷ்டாந்தத்தினின்றும் வேறுபாடாவது சாதந சாத்திய தர்மங்கள் இல்லனவாதல். வேறுபாடின்மை - சாதநசாத்தியதர்மங்கள் உள்ளனவாதல்.

'உபயாவியாவிருத்தி' என்னும் இலக்கியத்தின்பெயர் அதன் இலக்கணத்துக்கு ஆனமையால் முதலாகுபெயராயிற்று.

அன்னுவயமுறைப்படி சாதநசாத்தியங்கள் மீளாமை என்றாராயினும் வெதிரேகமுறைக்கிசையச் சாத்தியசாதநங்கள் மீளாமை என்பதே கருத்தாகக்கொள்க.

'மீளாமை' என்பதன் பகுதிப்பொருளாகிய மீட்சி, சாத்திய சாதநதர்மங்களின் இன்மையேயாதலால் அதன் எதிர்மறையாகிய மீளாமைக்குச் சாத்தியசாதநதர்மங்கள் உளவாதல் எனப் பொருளுரைக்கப்பட்டது.

'அன்றியும்' என்றது, இத்திருஷ்டாந்தப்போலியிலக்கணம் திருஷ்டாந்தப்பொருள் உள்ளதாதல்பற்றியும் இல்லதாதல்பற்றியும் நிற்கும் எனப் போலிவகையிலக்கணத்தொடு தொடர்புடையதாம் என்னும் குறிப்புணரநின்றது.

'உண்மையினுபயாவியாவிருத்தி', 'இன்மையினுபயாவியாவிருத்தி' என்பன வகையின் பெயர்கள்.

இவ் விருவகைப்பகுப்பு நியாயப்பிரவேசத்திற் சொல்லப்படவில்லை. நியாயப்பிரவேசத்துள், சாதர்மிய திருஷ்டாந்தாபாசவகை சொல்லுமிடத்தில் இவ்விருவகையான பகுப்புச் சொல்லி, இங்கு வைதர்மியதிருஷ்டாந்தாபாசவகையுள் இவ்விருவகைப்பகுப்புச் சொல்லாமல் விட்டுவிட்டது குன்றக்கூறலும், முறைபிறழ்தலுமாம்.

### 1. உண்மையினுபயாவியாவிருத்தி.

இனி, இவ்வுபயாவியாவிருத்திவகைகளுக்குத் தனித்தனி இலக்கணங்கூறி உதாரணங்காட்டி விளக்கத்தொடங்கி, முதலில்

உண்மையினுபயாவியாவிருத்தி என்னும் திருஷ்டாந்தப்போலி நிரூபிக்கப்படுகிறது. அது வருமாறு:—

‘......உண் மையினுப யாவி
யாவி ருத்தி யுள்ள பொருட்கட்
சாத்திய சாதந மீளா தபடி
வைதன் மியதிருட் டாந்தங் காட்டல்
சத்த நித்த மமூர்த்த மாதலி
னென்றூற் கியாதொன் றியாதொன்று நித்தமன்
றமூர்த்தமு மன்று காசம்போ லென்றால்
வைதன் மியதிருட் டாந்த மாகக்
காட்டப் பட்ட வாகா சம்பொரு
ளென்பாற் காகாச நித்தமு மமூர்த்தமு
மாதலாற் சாத்திய நித்தமுஞ் சாதநமா
வுள்ள வமூர்த்தமு மிரண்டு மீண்டில’ (சங0-சக)

என்பதாம்.

இதனுள்,

‘......உண் மையினுப யாவி
யாவி ருத்தி யுள்ள பொருட்கட்
சாத்திய சாதந மீளா தபடி
வைதன் மியதிருட் டாந்தங் காட்டல்’ (சங0-ஙங)

என்றது இலக்கணம்.

இதன்பொருள்: ‘உண்மையினுபயாவியாவிருத்தி என்னும் வைதர்மிய திருட்டாந்தப்போலியின் இலக்கணமாவது: உள்ளதாகக் கொள்ளப்பட்டதொருபொருளின்கண் வாதியாற் சொல்லப்பட்ட சாத்தியதர்மமும் சாதநதர்மமும் இல்லனவாகாமல் உள்ளனவாயிருக்கும்படி அப்பொருளை வைதர்மியதிருஷ்டாந்தமாகக்காட்டுதல்’ என்றவாறு.

‘உண்மையினுபயாவியாவிருத்தி’ என்னும் இலக்கியத்தின் பெயர் அதன் இலக்கணத்துக்கானமையால் முதலாகுபெயராயிற்று.

‘உள்ளபொருள்’ என வாளாகூறியவதனால், வாதியாலும் எதிரியாலும் உள்ளதென்று கொள்ளப்பட்டதொருபொருள் என்பது கருத்தாயிற்று.

மீளுதல், உள்ளனவான சாத்தியசாதநங்கள் இல்லனவாகத் திரும்புதலாதலால், மீளாமை, இல்லனவாகாது உள்ளனவாயிருத்தலாயிற்று.

வைதர்மியதிருட்டாந்தமென்பது அதிகாரத்தாற் பெறப்பட்டதாயிருக்கச்செய்தேயும் மறித்துங் கூறியது, சாத்தியசாதந தர்மங்கள் மீளாதிருத்தல் சாதர்மியதிருஷ்டாந்தத்துக்குக் குற்றமாகாது இலக்கணமாயமையும் என்பதை அறிவுறுத்தியவாறு.

'வைதர்மியதிருட்டாந்தங்காட்டல்' என்றாராயினும் வைதர்மியதிருட்டாந்தங்காணுமாறு கூறல் என்பதே கருத்தாகக்கொள்க. இது சொற்பற்றிக்கூறிய இலக்கணம்; பொருள்பற்றிக்கூறுங்கால், காட்டப்பட்ட திருஷ்டாந்தத்தில் சாத்தியசாதநதர்மங்கள் மீளாதபடி உள்ளனவாயிருத்தல் என்பதாம்.

இனி இதற்கு உதாரணங் காட்டப்படுகிறது,

'சத்த நித்த மமூர்த்த மாதலி
னென்றாற் கியாதொன் றியாதொன்று நித்தமன்
றமூர்த்தமு மன்று காசம் போல் (எனல்)' (சஙச—ஙசு)

என்று.

இதனுள் சத்தம் பக்கப்பொருள்; நித்தமாதல் சாத்தியதர்மம்; அமூர்த்தமாதல் சாதநதர்மம். 'சத்தநித்த மமூர்த்தமாதலின் என்றான்' என்றது சத்தத்தைப் பக்கப்பொருளாகவைத்து, அது நித்தப்பொருள் எனத் துணியக்கருதி, அது அமூர்த்தப் பொருளாயிருத்தலை எதுவாகக்கூறும் வாதி என்றவாறு.

என்றாற்கு என்பதில் குகரம் உருபின்பொருள்பயவாது சாரியையாய்நின்றது; வேற்றுமைமயக்கமெனினும் ஆம்.

'யாதொன் றியொதான்று நித்தமன்று, அமூர்த்தமுமன்று' என்றது, வெதிரேகவியாப்திக்குரிய சாத்தியதர்மாபாவமான அநித்தத்தன்மையுள்ள தியா தியாது, அது அது மூர்த்தத்தன்மையுள்ளதன்று. என்று வெதிரேகவியாப்திவசனம் கூறியவாறு.

வினைப்பெயரொடு சுட்டுப்பெயர்க்குத் தொடர்புடைமையால் அது அது என்னும் சுட்டடுக்கு வருவித்துரைக்கப்பட்டது.

'ஆகாசம்போல்' என்றது திருஷ்டாந்தவசன அநுகாரம்; இதனுற் சொல்லப்பட்ட ஆகாசம் வைதர்மியதிருஷ்டாந்தப்பொருள்.

'போல்' என்னும் ஒப்புமையால், ஆகாசம் எப்படி அமூர்த்தப் பொருளாயிருந்துகொண்டு நித்தப்பொருளாயுமிருக்கிறதோ அப்படியே சத்தமும் அமூர்த்தப்பொருளாயிருப்பதால் நித்தப்பொருளாயுமிருக்கவேண்டு மென்பது போந்தபொருளாயிற்று.

'என்ருல்' என்பதன் முதனிலையைப் பிரித்து 'எனல்' என்னும் தொழிற்பெயராகக்கொண்டு, அதற்கு உதாரணம் என்னும் எழுவாய் வருவித்துமுடித்துக்கொள்க.

அவாய்நிலையால்வந்த 'எனல்' என்பது இது திருஷ்டாந்த வசனமென்னும் உறுப்பு என்பதுபடநின்றது.

இனி இத்திருட்டாந்தம் குற்றமுடையதென்று காட்டப்படுகிறது, என்ருல் என்றுதொடங்கி. அது வருமாறு:—

'................................என்ருல்
வைதன் மியதிருட் டாந்த மாகக்
காட்டப் பட்ட வாகா சம்பொரு
ளென்பாற் காகாச நித்தமு மமூர்த்தமு
மாதலாற் சாத்திய நித்தமுஞ் சாதநமா
வுள்ள வமூர்த்தமு மிரண்டு மீண்டில' (சஙசு—சக)

என்பது.

இதனுள், 'என்ருல்' என்றது முன்பு வாதிகூற்ருகப் பக்ஷசாத்தியசாதநதர்மாபாவவ்யாப்திவாசகமாகக் காட்டப்பட்ட "யாதொன் றியாதொன்று நித்தமன்று (அது அது) அமூர்த்தமுமன்று ஆகாசம்போல்'' என்ற வைதர்மியதிருஷ்டாந்தவுறுப்பிலுள்ள குற்றங்காட்டுதற்பொருட்டு அதனை அநுவதித்துக்கொண்டமைதோன்றநின்றது.

'வைதன்மியதிருட்டாந்தமாகக் காட்டப்பட்ட வாகாசம்' என்றது, இவ்வுதாரணம் சாதர்மியதிருஷ்டாந்தமாகக்காட்டப்படுமிடத்தில் சாத்தியசாதநதர்மங்கள் மீளாமை குற்றமாகாது; குணமேயாம் என்னும் குறிப்புணாநின்றது.

'ஆகாசம் பொருளென்பாற்கு' என்றது, ஆகாசம் என்னும் பெயருடையதொருபொருள் உண்டென்பாரும், இல்லையென்பாருமாகப் பொருட்பெற்றிகூறும் இருதிறத்தினருள், ஆகாசம் என்று ஒருபொருள் உண்டு என்று கண்ட எதிரிக்கு என்றவாறு. இதனால் இது, சன்னு என்னும் உபயாவியாவிருத்தி யென்பது அறிவுறுத்தியவாறு.

'ஆகாசம் நித்தமும் அமூர்த்தமுமாதலால்' என்றது, அவ்வாகாசம் நித்தப்பொருளாயும் அமூர்த்தப்பொருளாயுமிருத்தல் கோட்பாடாதலால் என்றவாறு.

மறித்தும் 'ஆகாசம்' என்றது அது என்னும் சுட்டுப்பொருள் படநின்றது.

நித்தப்பொருளாவது தோற்றமும் கேடுமின்றியிருப்பது.

அமூர்த்தமாவது வடிவில்லாதபொருளாயிருப்பது.

'கு'வ்வுருபு குறிப்பால் வருவித்துரைக்கப்பட்ட கோட்பாடு என்னும் பெயர்ப்பயனிலைகொண்டது.

'ஆதலால்' என்றது, பின் சாத்தியசாதநதர்மங்களிரண்டும் மீண்டில என்பதற்கு ஏதுவாயிற்று.

'சாத்தியநித்தமும் சாதநமாவுள்ள வமூர்த்தமு மிரண்டு மீண்டில' என்றது, ஆகாசம் நித்தியப்பொருளாதலால் சாத்திய தர்மமான நித்தியத்தன்மையும் மீண்டிலது (-இல்லதாகாது உள்ளதாகவேயிருப்பதாயிற்று). ஆகாசம் அமூர்த்தப்பொருளாதலால் சாதநதர்மமான அமூர்த்தத்தன்மையும் மீண்டிலது (-இல்லதாகாது உள்ளதாகவே யிருப்பதாயிற்று). ஆதலால் சாத்தியசாதநதர்மங்களிரண்டும் இவ் வைதர்மியதிருஷ்டாந்தத்தில் அங்ஙனம் மீளாதனவாயிருத்தல் குற்றமாயிற்று என்றவாறு. அங்ஙனம் மீளாதனவாயிருத்தல் குற்றமாயிற்று என்பது இசையெச்சத்தால் வந்தது.

நித்தம், அமூர்த்தம் என்பன நித்தத்தன்மையும் அமூர்த்தத்தன்மையுமாகிய அதனதன் பண்புணரநின்றன.

## 2. இன்மையினுபயாவியாவிருத்தி.

இனி நியாயப்பிரவேசத்தில் இதனையடுத்துக் கூறக்கடவதாய் நின்ற இன்மையினுபயாவியாவிருத்தி (அவித்யமானோபயாவியா

விருத்தம்) என்னும் வைதர்மியதிருஷ்டாந்தாபாசநிரூபணம் காணப்படாமையால் அதனையொழித்து மணிமேகலையிலுள்ள இன்மையினுபயாவியாவிருத்தியென்னும் வைதர்மியதிருஷ்டாந்தப் போலிநிரூபணம் காட்டப்படும். இத்திருஷ்டாந்தநிரூபணத்தில் *முதலடியால் இலக்கணம் சொல்லத்தோடங்கப்பட்டிருப்பது முற்றுப் பெறுமலே நிற்க, †இரண்டாமடிதோடங்கி யுதாரணங்காட்டிவிளக்கப் படுதலால், முதலடிக்கும் இரண்டாமடிக்கும் இடையே இலக்கணங் கூறுமடிகள் காணப்படாமலிருக்கின்றன. அவ்வடிகளிருக்கவேண்டிய இடங்களிற் புள்ளிக்குறிகொடுத்து ஏனையடிகளைச்சேர்த்து உரை வரை யப்படுகிறது. அது வருவாறு:—

*'இன்மையி னுபயா வியாவிருத்தி யாவது
(.......................................
.......................................
.......................................)
†சத்த மநித்த மூர்த்த மாதலா
னென்ற விடத்தி யாதொன் றியாதொன்
றநித்தமூர்த் தமுமன் றாகாசம் போலென
வைதன் மியதிருட் டாந்தங் காட்டி
லாகா சம்பொரு ளல்லவென் பானுக்
காகாசந் தானே யுண்மையின் மையினற்
சாத்திய வநித்தமுஞ் சாதந மூர்த்தமு
மீட்சியு மீளா மையுமிலை யாகும்' (சசஉ—ருo)

என்பது.

இதனுள், 'இன்மையினுபயாவியாவிருத்தியாவது' என்று இத்திட்டாந்தப்போலிக்கு இலக்கணம்சொல்லத்தொடங்கியது முடிவுபெறுமல்நிற்க, 'சத்த நித்த மமூர்த்தமாதலால்' என்பது முதலான அடிகளால் உதாரணங்காட்டி விளக்கப்பட்டிருக்கிறது.

இலக்கணவாக்கியத்திற் குறையாயுள்ள மூன்றடி காணப்பட வில்லை. அவை முற்காலத்தே ஏடெழுதுவோரால் எழுதாமல் தவறி விடப்பட்டிருக்கலாமென்று தோன்றுகிறது. அவ்விலக்கணவாக் கியம்,

'இன்மையி னுபயா வியாவிருத்தி யாவது
எதிரிக் குடம்பா டில்லாப் பொருள்வயிற்

சாத்திய சாதந தன்ம மிரண்டும்
மீட்சியு மீளா மையுமில வாதல்.'

என்ற பொருளுள்ள அடிகளாயிருக்கவேண்டும்.

இதன்பொருள்: 'இன்மையினுபயாவியாவிருத்தியென்னும் வைதன்மியதிருட்டாந்தப்போலியின் இலக்கணமாவது, எதிரியால் உள்ளதென்று கொள்ளப்படாததொருபொருளில் சாத்திய சாதநதர்மங்களிரண்டும் ஒருங்கே இல்லனவாயொழிந்தனவென்றேனும் உள்ளனவாயிருப்பனவென்றேனும் ஒருதலைதுணிதற்கிடனின்றியொழிதல்' என்பதாம்.

'இன்மையினுபயாவியாவிருத்தி' என்னும் இலக்கியத்தின் பெயர் அதன் இலக்கணத்துக்கானமையால் ஆகுபெயர்.

'எதிரிக் குடம்பாடில்லாப்பொருள்வயின்' என்றது வாதியால் உள்ளதாகக்கொள்ளப்பட்டபொருளாயிருந்தாலும் பயனின்று என்பதுபடநின்றது.

'சாத்தியசாதநதன்மமிரண்டும்' எனத் தொகைகொடுக்கப்பட்டமையால் அவை மீட்சியும் மீளாமையும் இலவாதலில் நிரனிறையாகாது ஒருங்கேசென்றியையுமென்பது குறிப்பாயிற்று.

'மீட்சியும் மீளாமையும் இலவாதல்' என்றது, எதிரிக்கு திருஷ்டாந்தப்பொருளில்லாமையால், அதன்கண் (-வாதிகூறும் அத்திருட்டாந்தவசனப்பொருளின்கண்) சாத்தியசாதநதர்மங்க ளிரண்டும் இல்லனவென்றேனும் உள்ளனவென்றேனும் ஒருதலைதுணிதற்கு இடனின்றியிருத்தல் என்றவாறு. [அதாவது: திருஷ்டாந்தப் பொருளைக்கண்டே அதன்கண் சாத்தியசாதநதர்மங்களின் மீட்சி(இன்மை)உண்டென்றேனும் மீளாமை(உண்மை)உண்டென்றேனும் இரண்டனுளொன்று தெளியவேண்டுமாதலால், அத்திருட்டாந்தப்பொருள் சித்திக்காதவழி அம்மீட்சியும் மீளாமையும் சித்திக்காமையே இதற்கு இலக்கணமாம் என்றபடி.]

இனி, இதற்கு உதாரணங்காட்டிவிளக்கத்தொடங்கி, முதற்கட் சாதநவாக்கியங்கூறப்படுகிறது, "சத்தம் அநித்தம் மூர்த்தமாதலால்" என்று.

இதனுள், சத்தம் பக்கப்பொருள்; அநித்தமாதல் சாத்திய தர்மம்; மூர்த்தமாதல் சாதநதர்மம்.

'என்றவிடத்து' என்றது சத்தத்தைப் பக்கப்பொருளாகக் கொண்டு, அதன்கண் அநித்தமாதலைத் துணியும் வேட்கையுடையோன் 'சத்தம் அநித்தம்' என்று பக்கவசனங்கூறி அதற்கு மூர்த்தமாதலால் என்று ஏதுவசனங்கூறும்விஷயத்தில் என்றவாறு.

இனி, இதற்கு வைதர்மியதிருஷ்டாந்தங்காட்டும் வாதிகூறும் புரோவாதம் அநுவதிக்கப்படுகிறது, "யாதொன் றியாதொன் றநித்தமூர்த்தமுமன்று; ஆகாசம்போல்'' என்று.

இதன்பொருள்: எது எது அநித்தமுமன்று அது அது மூர்த் தமுமன்று; ஆகாசம் நித்தப்பொருளாயும் அமூர்த்தப்பொருளாயு மிருப்பதுபோல் என்றவாறு. இது திருஷ்டாந்தவசனம். இதனாற் சொல்லப்பட்ட ஆகாசம் திருஷ்டாந்தப்பொருள். வினைவடுக்கால் சுட்டடுக்கு வருவித்துரைக்கப்பட்டது. உம்மையும் அன்மையும் அநித்தத்துடனும் கூட்டுக.

இனி, இத்திருஷ்டாந்தத்தினுள்ள குற்றங்காட்டி விளக்கப்படுகிறது,

'............................... என
வைதன் மியதிருட் டாந்தங் காட்டில்
ஆகா சம்பொரு ளல்லவென் பானுக்கு
ஆகாசந் தானே யுண்மையின் மையினால்
சாத்திய வநித்தமும் சாதந மூர்த்தமும்
மீட்சியு மீளா மையுமிலை யாகும்' (சசரு—ருo)

என்று.

இதனுள், 'என' என்றது முன்னர்க்காட்டப்பட்டதிருஷ்டாந்த வசனத்தின் அநுவாதக்குறிப்பு.

'வைதன்மியதிருட்டாந்தங் காட்டில்' என்றது, ஆகாசம் என ஒருபொருளில்லை என்னும் கொள்கையுடைய எதிரியைநோக்கி, 'சத்தம் அநித்தம்; மூர்த்தமாதலால்; ஆகாசம்போலும்' என்று வைதர்மியதிருஷ்டாந்தவாக்கியம் கூறும்விஷயத்தில் என்றவாறு.

'ஆகாசம் பொருளல்லவென்பானுக்கு' என்று பின்வருதல் நோக்கி, ஆகாசம் என ஒருபொருளில்லையென்னுங்கொள்கையுடைய எதிரியைநோக்கி என முன்பு கூட்டியுரைக்கப்பட்டது.

இதனால் ஆகாசம் என்று ஒருபொருளுண்டு என்றகொள்கை யையுடையவனுக்கு இது திருஷ்டாந்தப்போலியாகாது; குற்றமற்ற வைதர்மியதிருஷ்டாந்தமாம் என்பது குறிப்பாயிற்று.

'ஆகாசம் பொருளல்லவென்பானுக்கு' என்றது, அவனுக்கு என்னும் சுட்டுப்பொருள்பட்டுநின்றது.

ஈண்டு 'ஆகாசம்' என்றது பொருளுணர்த்தாது சொல்லாகிய தன்னையுணர்த்திநின்றது.

ஆகாசம் பொருளல்லவென்றது 'ஆகாசம்' என்னும் சொல் பொருளுடையதன்று என்றவாறு; பொருளல்ல என்றது பொரு ளன்மையுடையது என்றபடி. அன்று என்பது அல்லவெனத் திரிந்துநின்றது. 'ஆகாசம் பொருளல்ல' என்றதனை 'குதிரை கொம் பிலது' என்பதுபோல்வருவதோ ரஃறிணைமுடிபாகக்கொள்க. இங்ஙனங்கொள்ளாக்கால் இது ஆகாசம் பொருளெனக்கொள்ளா தான்கூற்றுதலால் சுவசனவிருத்தமாம் என்க.

என்பானுக்கு என்றது ஆகாசம் என்று ஒருபெயருடைய பொருளில்லை என்னும் கோட்பாடுடைய அவ்வெதிரிக்கு என்ற வாறு.

"ஆகாசந்தானே யுண்மையின்மையினால் சாத்தியவநித்தமும் சாதநமூர்த்தமும் மீட்சியு மீளாமையு மிலையாகும்" என்றது, சாத்தியசாதநதர்மங்களின் இன்மைகளுக்கு இடனாகக்காட்டக் கருதிய திருஷ்டாந்தப்பொருளே உள்ளதாயில்லாமையால் (-சித்திக் காமையால்) அதன்கண் காட்டக்கடவ சாத்தியதர்மமீட்சியும் சாதநதர்மமீட்சியும் சித்திப்பனவல்ல; அத்தர்மங்களின் மீளா மைகளும் சித்திப்பனவல்ல என்றவாறு.

'ஆகாசந்தானே' என்றது 'முதலுக்கே மோசம்' என்னும் வழக்குப்போலத் தேற்றத்தை வெளிப்படுத்திநின்றது.

'உண்மையின்மையினால்' என்றது உள்ளதாந்தன்மையில்லா மையால் என்றவாறு; சூனியமாதலால் என்றபடி.

'சாத்திய வநித்தமும் சாதநமூர்த்தமும்' என்றது, சாத்திய தர்மமாகிய அநித்தத்தன்மையும், சாதநதர்மமாகிய மூர்த்தத் தன்மையும் இரண்டும் என்றவாறு.

"மீட்சியும் மீளாமையு மிலவாகும்" என்றது, வைதர்மிய திருஷ்டாந்தத்துக்குரிய சாத்தியசாதநங்களுடைய இன்மையி னுடனிகழ்ச்சியும் இன்று; சாதர்மியதிருஷ்டாந்தத்துக்குரிய சாதந சாத்தியங்களின் உண்மையினுடனிகழ்ச்சியும் இன்று, என்றவாறு. 'இலவாகும்' என்றது மீட்சி மீளாமைகளுக்குப் பொது வான பன்மைவினையாயினும் அவற்றைப் பிரித்துரைக்குமிடத்துத் தனித்தனி யொருமைப்பொருளாதலால் இன்று என ஒருமைவினை யாற் பொருளுரைக்கப்பட்டது.

மீட்சியில்லாமையால் வைதர்மியதிருஷ்டாந்தமுமாகாது மீளாமையின்மையால் சாதர்மியதிருஷ்டாந்தமுமாகாதொழிந் தமையால் இது திருட்டாந்தப்போலியாயிற்று.

மீட்சியுள்ளவிடத்து வைதர்மியதிருஷ்டாந்தமாகும். மீட்சி யில்லாதவிடத்து வைதர்மியதிருஷ்டாந்தப்போலியாகும்.

மீளாமையுள்ளவிடத்துச் சாதர்மியதிருஷ்டாந்தமாகும், மீளா மையில்லாதவிடத்துச் சாதர்மியதிருஷ்டாந்தப்போலியாகும்.

மீட்சியும் மீளாமையும் இல்லாமையால் இருவகையானும் நல்ல திருஷ்டாந்தமாகாது திருஷ்டாந்தப்போலியாயிற்று என்பது குறிப்பு.

மீட்சியில்லாமை, மீளாமையில்லாமை என்னும் இரண்டுவகை யும் திருஷ்டாந்தப்பொருளின் இன்மைகாரணமாகச் சாத்திய சாதநதர்மங்களின் இன்மையறியப்படாமையால் இது வைதர்மிய திருஷ்டாந்தப்போலியாயிற்று.

[தொடரும்.]

திரு. நாராயணையங்கார்,

பத்திராசிரியர்.

# கம்பராமாயண இன்கவித்திரட்டு.

[௨௪௦-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

## அட்சகுமாரன் வதைப்படலம்.

இராவணன்மகன் அட்சகுமாரனென்பவனை அனுமான் கொன்றதைக் கூறுவது.

### அனுமானைப் பிடிக்க இராவணன் அனுமதிபெற்று அட்சகுமாரன் புறப்படுதல்

[பஞ்சசேனாபதிகள் படையோடு பட்டதைப் பருவத்தேவர் பகரக் கேட்டுக் கொடுங்கோபங்கொண்டு தானே அனுமானை எதிர்க்க எழுந்த இராவணனை அவன்மகன் அட்சன் தடுத்து 'ஐயனே! அந்தக் குரங்கைப்பிடிக்க அடியேனுக்கு அனுமதி அருளுதி. எளிய குரங்கை எதிர்த்தல் உன் பெருமைக்கு ஒவ்வாது. இச் சிறியகாரியத்தைச் செய்ய எனக்கு இடங்கொடு. நீ, இடம்பெயராது இங்கேயே யிருந்தருள்.

முன், இந்திரனைப் பிடித்துக்கொடுக்க யானிருக்கவும், என் அண்ணனை ஏவினாய். அதனால், என் சௌரியத்தைக் காட்டுதற்கு வாய்த்த சந்தர்ப்பம், எனக்குப் பயன்படாமற்போயிற்று. அந்தக் குரங்கு, இந்த இலங்கைக்கு இழிவையுண்டாக்க எண்ணி ஈசனே வேடமாறிவந்ததாயிருந்தாலும், அதனை அரைநொடிக்குள்ளே பிடித்துக்கொடுப்பேன்; தவறுவேனேல், தண்டனைசெய். படைகொடுசெல்ல, விடைகொடு' என்றான். இராவணன், அவனை, மகிழ்ந்துநோக்கித் 'தேரேறிச் சேனையோடு செல்லுதி' என்றான்.

## சேனைப்பெருக்கம்

அட்சனோடு சென்ற சேனை, கடல்போல அளவற்றதாயிருந்தது. கடலிலுள்ள மீனை எண்ணலாமானால் சேனையிலுள்ள தேர்களை யெண்ணலாம்; சுறுமீன்களை யெண்ணலாமானால், யானைகளையும், அலைகளை யெண்ணலாமானால், குதிரைகளையும், மணலை எண்ணலாமானால், காலாள்களையும் எண்ணலாம். அரக்க அரசகுமாரரான அட்சன் தோழர் பன்னீராயிரவரும் மந்திரிகள் தந்திரிகள் முதலானோர் மக்கள் பல லட்சத்தினரும் அவனுக்குத் துணையாகத் தொடர்ந்தார்கள்.

## அட்சன்சபதம்

அனுமான், அட்சகுமாரனை நோக்கி, இராவணனோ இந்திரசித்தோவென்று சந்தேகித்து, இருவருமல்லனென்று முடிவு செய்தான். அட்சன் அனுமானை நோக்கி, நகைத்து 'இந்தக் குரங்கா இராக்கதர்கூட்டத்தைக் கொன்றது?' என்று கூறச் சாரதி 'இதனை அலட்சியமாக எண்ணலாகாது. மன்னனோடு பொருத வாலி, குரங்கன்றோ? இதனைச் சாக்கிரதையாக எதிர்ப்பாயாக' என்றான். அட்சன், 'அசோகவனபங்கஞ்செய்த மட்டோடமையாமல், அளவற்ற அரக்கரை அழித்து நமக்கு மானபங்கத்தைச் செய்த குரங்கைக் கொல்லுதலோடு நில்லாமல், உலகெங்குஞ் சென்று, குரங்கு என்ற பேரேயில்லாமற்போகக் குரங்குக்குலத்தைக் கருவறுத்து நிர்மூலமாக்குவேன்' என்று, வெஞ்சினத்தோடு வஞ்சினங்கூறினான்.

## அரக்கர்படையை அனுமான் அழித்தல்

அரக்கர்சேனை அறக் காய்ந்துலர்ந்த புற்காடாகத் தான் அக்கினியாக, அனுமான், அந்தச் சேனையை அழிப்பானானான். போர்க்களம் தாழியாக, சேனை தயிராக, அனுமான் மத்தாக, அவனால் தாக்கப்பட்ட சேனை, மத்தெறியுண்ட தயிர்போல உடைந்து சிதறியது. அவன் சூரியனாக, அவன் பொருதல்

வெயிலெறித்தலாகச் சேனை வெயிலில் அகப்பட்ட புழுப்படும்பாடு பட்டது.

### அனும அட்ச யுத்தம்

அரக்கர்சேனை அனைத்தும் அழியக்கண்ட அட்சகுமாரன், சினமூண்டு, தீப்போலக் கண்கள் சிவக்கச் சென்று அனுமான்மேல் ஈரேழம்புகள் எய்தான். இவன், அந்த அம்புகளை இருப்புத் தடியால் அடித்துத் தரையில் வீழ்த்தினன். அவன், அம்புகளால் அந்தத் தடியைப் பொடியாக்கினன். இவன், வேறு ஆயுதம் யாதும் இல்லாமையால், கையே ஆயுதமாகக்கொண்டு, அவன் தேர்மீது தாவித் தேர்ப்பாகனையும் குதிரைகளையும் கொன்றான். அப்போது, அவன் எய்த வாளிகள் மார்பிலும் தோள்களிலும் அழுந்த, இவன் அவன்வில்லை ஒருகையினாற் பற்ற, அவன் அதனைப் பிடித்த கையோடு அடுத்தகையாலும் பற்றியிழுக்க, அது முறிந்தது. அது முறியவே, அவன் வாளையுருவிக் குத்த, இவன், அதை ஒடித்தெறிந்தான். வாட்போர் தோற்றவன், தோட்போர்செய்வானாய், அனுமானைக் கட்ட, இவன், அவனைத் தப்பவொட்டாமல் வாலினாற் சுற்றிக் கீழே தள்ளி, மேலே ஏறி, வாயினின்று பற்களும் கர்ணகுண்டலங்களினின்று கற்களும் உதிரக் கன்னங்களிலே அடித்துப் பிடர் பிடித்துக் குடர்பிதுங்கக் குத்தினன்: பின்பு, போர்க்களம் அம்மியாக, அவன் சதை அரைக்கும் அரிசியாக, இரத்தம் அரிசியை அரைத்தற்குதவும் நீராக, சதையொழிந்த எலும்புப்பகுதி அம்மிக்குழவியாக அரைத்தான். அதனால் குற்றுயிராகக் கிடந்த அவன், முற்றுயிரும் இழந்தான்.

### அட்சன் இறக்கக்கண்ட அரக்கவீரர் உயிர்தப்பச்செய்த உபாயங்கள்

அட்சகுமாரன் இறந்தபோது, இறவாமல் எஞ்சியிருந்த இராக்கதரிலே, சிலர் இரத்தவெள்ளத்துள் மூழ்கியும், சிலர் பிணக் குவியல்களுள் நுழைந்தும் மறைந்துகொண்டார்கள்: சிலர் செல்லுந் திசை தெரியாமல் திண்டாடித் திரிந்து வலியழிந்தார்கள்: சிலர்

எங்கும் போகாமல் நின்ற இடத்தே நின்றார்கள்: சிலர், கண்ட கண்ட திசைகளிலே தாறுமாறாக ஓடினார்கள். சிலர், ஓடும்போது எதிர்ந்து தழுவிய தம்மவரை நோக்கி 'நும்மவரல்லேம்; தேவரேம்' என்று உரைத்து உதறித் தள்ளிவிட்டு ஓடினார்கள்.

இறந்தோர் உறவினர் எய்திய துயரம்

போர்க்களத்துக்குவந்து தேடித் தம் கணவருடலைக் கண்டு மேல்விழுந்து வெய்துயிர்த்து ஆவிநீங்கிய மாதர், காதலிருவர்க்கு உடம்பு இரண்டேயன்றி உயிர் ஒன்றேயென்பதை உருபிப்பார் போன்றார். உயிர்துறந்தோருடைய உறவினர் அழுத ஒலி உலக முழுதும் பரவியது.

மண்டோதரி மறுகுதலும் இராவணன் இன்னலும்

அட்சகுமாரன் இறந்ததை யறிந்த மண்டோதரி இராவணன் அடியில் விழுந்து வயிற்றில் அறைந்து, வாய்விட்டலறி அழுதாள். அப்போது, அட்சகுமாரனும் சேனையும் அழிந்ததை அறிவிக்க வந்த அசோகவன காவற்றேவர்கள், இராவணன் அடைந்த கடுந் துயர்கண்டு,உள்ளே உண்டான உவகையைக் காட்டாமல்,வெளியே தோன்றிய உவகைக் கண்ணீரைத் துக்கக்கண்ணீராகக்காட்டிக் கொண்டு, தாமும் அவன் காலில் விழுந்து கதறியழுதார்கள்.]

அட்சகுமாரன்வதைப்படலம் முற்றியது.

[தொடரும்]

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

---

ஸ்ரீ:

# ஒலியெழுத்துக்கும் உருவம் உண்டு.

செந்தமிழ் முப்பத்துமூன்றாந்தொகுதியின் எழாம்பகுதியில் (௩௩௬-ஆம் பக்கத்தில்) யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையிலுள்ள ச. சுப்பிரமணியபிள்ளை என்பார் ஓர் ஐயவினா என்னும் தலைப்பின்கீழ் மூன்றுவினா வினவியுள்ளார்.

அவற்றுள் முதல்வினா: தொல்காப்பியப்பாயிரத்தின் நச்சினார்க்கினியத்தில் ஒலியெழுத்து உருவப்பொருளென்பதை விளக்கவேண்டி எடுத்துக்காட்டிய செறிப்பச்சேறல் முதலிய எதுவாசகங்களின்பொருளை விளங்கவைக்கவேண்டுமென்பது.

இரண்டாவதுவினா: துலாக்கோலுக்குச்சொல்லப்பட்ட 'மிகினும் குறையினும் நில்லாதாகல்' என்ற பகுதியை விளங்கவைக்க வேண்டுமென்பது.

மூன்றாவதுவினா: ஆனேற்றினியல்பை விளக்கவேண்டுமென்பது.

இவைபோன்ற பொருட்டெளிவில்லாப்பகுதிகளைப் பத்திரிகை வாயிலாக வினவுவதும், அவற்றைக் கற்றறிந்தார் தாம் ஆராய்ந்து கண்டவாறு விடைகளையளிப்பதும் தமிழறிவுவளர்தற்கேதுவாம்.

அறிவிலும் வயதிலும் சிறியேனாகிய எனக்கு இவ்வரிய வினாக்களுக்கு விடையளித்தலரிதாயினும், தெரிந்தவரையில் எழுதி வெளியிடுவது இழுக்காகாதென்றெண்ணி இப்பொருளுரையெழுதற்கு முற்பட்டேன். இதிற்காணும் பிழைகளைப் பெரியோர் திருத்திக்கொள்வாராக.

## முதல் வினாவுக்கு விடை.

தொல்காப்பியப்பாயிர நச்சினார்க்கினியத்தில் ஒலியெழுத்து உருவப்பொருளென்பதை விளக்கவேண்டியும் காற்றின்குணமென்பதை விளக்கவேண்டியும் எழு எதுவாசகங்கள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. அவை:

(1) செறிப்பச்சேறலானும்
(2) செறிப்பவருதலானும்
(3) இடையெறியப்படுதலானும்

(4) இன்பதுன்பத்தையாக்கலானும்

(5) உருவுமுருவுங்கூடிப்பிறத்தலானும்

(6) உந்திமுதலாகத்தோன்றி எண்வகைநிலத்தும்பிறந்து கட்புலனுந்தன்மையின்றிச்செவிக்கட்சென்றுறும் ஊறுடைமையானும்

(7) விசும்பின்கணியங்குவதோர்தன்மையுடைமையானும் என்பனவாம்.

இவ் வேதுவாசகங்களை ஒவ்வொன்ருக எடுத்துக்கொண்டு பொருள் வரையப்படும்.

(1) 'செறிப்பச் சேறலானும்' என்பது முதல் ஏதுவாசகம். இஃது ஒலியெழுத்திற்கு உருவமுண்டென்று காட்டவந்தது. இதனுள், செறிப்ப என்றது செறி என்னும் முதனிலையடியாகப் பிறந்த பிறவினைச் செயவெனெச்சம். செறிதல் ஈண்டு நெருங்குதல். இதன் பிறவினை செறித்தல். இதன்பொருள் ஒன்ருேடொன்று சேருமாறு நெருக்குதல் என்பதாம். செறித்தலென்னும் இப் பிறவினை செயப்படுபொருள் குன்ருதேநிற்கும். இவ் வேதுவாசகத்திற்கு முன்புள்ள அதுவென்னும் சுட்டுப்பெயர் எழுத்தொலியையே குறித்துநிற்றலால், அவ்வெழுத்தொலியே சேறற்கு வினைமுதலாயிருத்தலுடன் செறித்தல் என்னும் இவ்வினைக்குச் செயப்படுபொருளாயும்வந்தியையநின்றது.

எழுத்தொலிகளைச் செறித்தலாவது: அவ் வொலியணுக்களை நெகிழவிடாது அவை ஒன்ருெடொன்று இறுகிச் சேருமாறு உரக்க உச்சரித்தலாம். ஆகவே, 'செறிப்பச்சேறலானும்' என்னும் இவ் வேதுவாசகத்தின்பொருள், ஒருவன் தான் எழுத்துக்களின் ஒலியணுக்களை நெருக்கிச் சேர்த்து உச்சரிப்ப அவ்வெழுத்துக்கள் அவ்வுச்சரிப்போனிடத்தினின்றும் கேட்போனுகிய பிறன்கட் செல்லுதலானும் என்பதாயிற்று.

சேறலுடைமைமாத்திரமே ஏதுவாகக்கூருது, செறிப்பவென்னும் அடைகொடுத்தோதியது என்கருதி எனின் மந்திரசெபம் முதலியவற்றுள் அவ்வெழுத்தொலியணுக்களைச் செறித்துவழங்காது நெகிழ வழங்குதலால் அவ்வெழுத்தொலிகள் பிறன்கட் செல்லாதனவாயின; அதனை நீக்கக்கருதிச் செறிப்பச் சேறலானும் என்ருர் என்க.

'செறிப்பவருதலானும்' என்புழியும் செறிப்பவென்னும்சொற் பொருள்முதலியன இவ்வாறே கொள்ளத்தகும்.

(2) 'செறிப்பவருதலானும்' என்பது இரண்டாவது ஏது வாசகம். இதுவும் எழுத்தொலி உருவுடைப்பொருளென்பதை விளக்கவந்ததாம்.

இதன்பொருள்: பிறனொருவன் எழுத்தொலிகளைச் செறித்து உச்சரிப்ப அவை கேட்போனுழை தன்கண் வருதலானும் என்பது.

செறிப்பச்சேறலானும், செறிப்பவருதலானும் என்னும் இவ்விரண்டேதுக்களானும் செலவு வரவென்னும் வினைநிகழ்ச்சியுடைமையால் என்பதாயிற்று. இவற்றிற்குத் திருஷ்டாந்தம் எறிபந்து முதலிய செலவுவரவுடைப் பொருள்களாம். அவைபோல எழுத்தொலியும் உருவமுடையதென்பது குறிப்பாயிற்று. உருவமெனினும் வடிவமெனினும் மூர்த்தமெனினும் ஆகாரம் எனினும் ஒக்கும்.

இவ்வேதுக்கள், எறிபந்து முதலிய உருவுடைப்பொருள்களுக்கே சேறல் வருதலுடைமையானும், ஆகாசம் முதலிய உருவில் பொருள்களெல்லாம் இயங்குதலிலவாதலால், சேறல் வருதலுடைய வல்லவாதலானும், சேறல்வருதலுடைய எழுத்தொலி உருவப் பொருளேயெனச் சாதித்துநின்றன.

உருவென்பது கட்புலனும் உருவும் கருத்தானுணரும் உருவுமென இருவகைத்து. மண் நீர் அனல்களின் அணுக்களானய காரியப்பொருள்களிலுள்ளது கட்புலனும் உருவாம். அவற்றின் பரமாணுக்களிலும் காற்று எழுத்தொலி முதலியவற்றிலுமுள்ளது கருத்தானுணருமுருவாம்; இது குறிப்பெனவும்படும். இதன் விளக்கம் வருமாறு:—

குடம் படம் முதலிய பொருள்களிலுள்ள உருவம் கட்புலனுயுள்ளதே. அக்குடம் படம் முதலிய பொருள்களே இருட்டறையுளிருந்தால் கட்புலனுதலில்லை. கண்ணுற் காணுது கையாற் றடவியறியும்போது குடத்தில் குடவடிவமும் படத்தில் படவடிவமும் நிறமொழியப் புலப்படுகின்றன; குடத்தின் நிறமும் படத்தின் நிறமும் புலப்படுதலில்லை. ஆதலால், நிறமுடைய பொருள்களை ஒளியுடன்கூடிய கண்ணுற் காணுங்கால் அவற்றின் நிறம் புலப்படும்போது அந்நிறத்துடன் வியாபித்திருக்கும் உருவமும் புலப்படுகிற

தென்றும், நிறம் புலப்படாதவிடத்தில் அந்நிறமுடைப்பொருள்களின் உருவமும் கட்புலனுவதில்லையென்றும், கண்ணல்லாத பிறிதொரு துவக்கிந்திரியத்துக்கு நிறமொழிந்த வடிவம் புலனுகிறதென்றும் அறிகிறோம்.

அவ்வாறே எழுத்தொலிகளுக்கும் நிறமின்மையால் அவற்றின் உருவமும் கட்புலனுதலில்லை. ஆதலால் நிறமில்லாத எழுத்தொலியின் உரு கண்ணின்வேறுன சுரோத்திரேந்திரியத்தால் அறியத்தக்கது என்பதாயிற்று. ஆதலால் இது குறிப்பெனப்பட்டது.

ஒலியணுக்களைச் செறித்தலால் ஒலி புலப்படுதல் எங்ஙனமெனில் கூறப்படும்:— 'மண்டிணிந்தநிலம்' என்பதனுல் மண்ணணுச் செறிதலால் தோன்றியது நிலம் என்று தெரிகிறோம். வானிற் புலப்பாடின்றியிருக்கும் நீரணுக்கள் செறிதலால் மழைத்துளியாகப் புலப்படும்; அரணியிற் புலப்பாடின்றியிருக்கும் நெருப்பணுக்கள் ஞெகிழியால் கடைந்து செறிக்கும்பொழுது நெருப்பாகப் புலப்படும்; வீட்டறைகளில் புலப்படாது பரந்துகிடக்கும் காற்றணுக்கள் விசிறி முதலிய கருவிகளால் வீசிச் செறிக்குங்கால் காற்ருகப் புலப்படும்; பாலின்கணுள்ள நெய்யணுக்கள் புலப்படாதிருப்பினும் அப்பாலை மத்தினுற் கடைந்து செறிக்கப்பட்டால் அவ்வணுக்கள் வெண்ணெயாகப் புலப்படும். அவ்வாறே நெகிழ்ந்து பரந்து கிடக்கும் ஒலியணுக்கள் கருவிகளாற் செறிப்புண்டவழி ஒலியாகச் செவிப்புலனும் என்பது தெளிவாம். இதுநோக்கியே செறிப்பவென்ருராயிற்று.

ஆகவே புலப்பாடின்றிநெகிழ்ந்துகிடக்கும் எழுத்தொலியணுக்களைச் செறித்து உச்சரித்தலால், எழுத்தொலி புலப்படுதலானும், அது, போக்கு வரவு முதலிய வினையுடையதா யிருத்தலானும் ஒலியெழுத்து உருவமுடையதாமென்பது போந்தது. இது பின்புள்ள ஏதுக்களாலும் வலியுறும்.

[தொடரும்]

T. R. வீரராகவையங்கார்,

உதவிப்பண்டிதர்,

மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை.

# ரமாமணி.

[உடுo-ஆம்பக்கத் தொடர்ச்சி]

## மூன்றும் அதிகாரம்.

### தனிமையில்.

"Like a veil,
Which, if withdrawn would but disclose the frown
Of one who hates us so the right was shown
And grimly darked o'er the faces pale
And hopeless eyes."

'Don Juan'

[திறந்தால், நமக்கு விரோதியான ஒருவனது, குரூரமான பார்வையில், நம்மைத் தள்ளிவிடக்கூடிய ஒரு மூடியைப்போல், வெளுத்த முகங்களுடனும், நம்பிக்கையில்லாத கண்களுடனும், இரவு வெளிப்பட்டது.]

யாத்ரீகர்கள் மணிராஜனைத் தனியேவிட்டுச் சென்றபிறகு, 'திக்குவிஜயபுரம்' என்றும், 'ராஜசேகரநகரம்' என்றும் இரு சிறு கிராமங்கள் அவர்கள் கண்கள்முன் தோன்றின. அவைகளில் மனிதர் குடியிருப்பதாகத் தெரியவில்லை. காடுமண்டியிருந்தது. கரையோரமாக நெடுந்தூரம், மணல்மேடாக இருந்தது. நடுப்பகல் வேளையில், அம்மணல்மேடு, சூரியகிரணங்கள்பட்டுப் பளபள வென்று பிரகாசித்தது. மணல்மேட்டுக்குக்கீழே, மரங்களுக்கிடையிற் சில வீடுகள்மட்டு மிருந்தன.

மணிராஜனே, அதிக பயங்கரமான இடத்தில் தனிமையாக விடப்பட்டான். அவன் விறகுகட்டைச் சுமந்துகொண்டுவந்து, நதியின் கரையில் படகைத் தேடிப்பார்த்து, அதைக் காணாததால் மிகவும் திகிலடைந்தான். தன்னைத் தனிமையாக விட்டுப்போனதால், அவர்களை அவன் வெறுத்தான்.

ஒருகால் தோணியை வேறெங்கேயாவது நிறுத்தியிருப்பார் களோவென்று நினைத்து, அங்குமிங்கும் தேடிப்பார்த்தான். தன்னைக் கூட்டிப்போவதற்காகப் படகைத் திருப்பிக் கொண்டுவருவார்களோவென்று நினைத்துத் திகைத்துநின்றான். எங்கும் தேடியும், படகு அவன் கண்களுக்குப் புலப்படவில்லை. பிரயாணிகளையும் காணவில்லை. பசியின்மிகுதியால் அவனுக்கு மிகவும் களைப்பு உண்டாயிற்று. படகைத்தேடிக்கொண்டு, ஆற்றின் கரையில் அங்குமிங்கும் அலைந்தான். தோணியைக் காணுமல், அவன் முன் நின்ற இடத்துக்கே வந்துசேர்ந்தான். படகு, தன்னையழைத்துக் கொண்டுபோகத் திரும்பிவருமெனத் தேறினன். அது வரவில்லை. மறுபடியும் கொந்தளிப்பு ஏற்பட்டது. சூரியாஸ்தமனகாலமும் நெருங்கியது. இப்பொழுதாவது படகுவந்தால், அதில் ஏறிப்போகலாமேயென நினைத்து, அதைக் காணுததால் மிகவும் துக்கித்தான். ஒருகால் படகு ஜலத்தில் கவிழ்ந்து மூழ்கிவிட்டதோவெனச் சந்தேகித்தான். மூழ்கியிராவிடில், நிர்ஜனமான இந்த இடத்தில் தன்னைத் தனியேவிட்டுப்போகார்கள், என உறுதிகொண்டான்.

அவன் அவ்விடத்தில் எங்கும் தேடிப்பார்த்ததில் குடியிருப்பாவது வீடாவது ஒன்றுமில்லை. மனிதர்களையும் காணவில்லை. ஆகாரத்துக்கு வழியொன்றுமில்லை. விடாய்தீர்க்கத் தண்ணீருமில்லை. ஆற்றின் ஜலமோ அதிக உப்பாயிருந்தது. பசியாலும் தாகத்தாலும், அவன் நெஞ்சம் வெடித்துப்போகும்போலிருந்தது. பனியிலிருந்து தன்னைக் காத்துக்கொள்ள மேல்வஸ்திரமுமில்லை. குளிர் காற்று வீசக்கூடிய நதிக்கரையில், பனியைக்கொட்டிச் சிதறக் கூடிய வானத்தின்கீழ்த் தங்குவதற்கு இடமின்றியும், போர்த்துக் கொள்ள ஆடையின்றியும் தனியேயிருக்கும்படி அவனுக்கு நேர்ந்தது. இரவுவேளையில் புலி கரடிகள் எதிர்ப்படக்கூடும்; தனது பிராணனுக்கு அபாயம் ஏற்பட்டுவிட்டதெனவே நிச்சயித்தான்.

கவலைமிகுதியால், மணிராஜனால் ஒரே இடத்தில் இருக்கமுடியவில்லை. கரையைவிட்டு விலகி, மேட்டின்மேலே சென்றான். இங்குமங்கும் அலைந்தான். வரவர இருள் பரவிற்று. குளிர்மிகுந்த, வானத்தில் நக்ஷத்திரங்கள் பிரகாசித்தன. அவனது சொந்த ஊரில் எவ்விதம் பிரகாசிக்குமோ, அவ்விதமே இங்கும் அவைகள் பிரகாசித்தன. எங்கும் இருட்டு; மனிதஅரவமே கிடையாது. ஆகாயம் வெட்டவெளி, சமுத்திரம் எங்கும் நிச்சப்தம். ஆனாலும் கடலிலிருந்து இடைவிடாமல் அலைகளின் ஒலியும், காட்டுமிருகங்களின்சத்தமும்மட்டும் அவன் காதுகளில் விழுந்தன. அப்போது மணிராஜன் சிலவேளை மணல்மேட்டின்மீதும், சிலவேளை மணல்மேட்டின் கீழ்த்தரையிலும், சிலவேளை அதன் தாழ்வாரத்திலும் அலைந்துகொண்டிருந்தான். நடக்கும்போது ஒருகால் துஷ்டமிருகங்கள் வந்துவிடுமோவென அச்சமும் பிறந்தது. ஓரேயிடத்திலிருந்தாலும், அந்தப் பயமே மேலிட்டது.

அலைந்துதிரிந்ததால், மணிராஜனுக்குக் கிறுகிறுப்பு ஏற்பட்டது; மயக்கமும் உண்டாயிற்று. மயக்கத்தால் கீழே உட்கார்ந்து குளிரிலிருந்து தன்முதுகைக் காத்துக்கொள்ள, மேட்டில் சாய்ந்துகொண்டான். நாள்முழுதும் அவன் பட்டினியாதலால் அவனுக்குச் சிரமம் அதிகரித்தது. அப்பொழுது அவனது சொந்த ஊரிலிருக்கிறதான, மிருதுவான படுக்கையின் நினைவு வந்தது. அதிகச் சிரமத்தினால் அவனுக்கு மயக்கம் உண்டாகி நித்திரைவந்து மூடிக்கொண்டது.

[பரமேசுவரன், இவ்விதமாக நித்திரையென்ற ஒரு மறதியையேற்படுத்தியிராவிட்டால், ஸம்ஸாரத்தில் சம்பவிக்கிற துக்கங்களை மனிதனால் சகிக்கவேமுடியாது.]

[தொடரும்.]

V. S. ராமஸ்வாமிசாஸ்த்ரி.

# மதிப்புரை.

நீலகேசி மூலமும் உரையும்:—இது, பழைய தமிழ்நூல்களுள், சிறுபஞ்சகாவியங்களில் ஒன்று; எதிர்நூல்வகையிற் சேர்ந்தது. இதனுள், ஜைனசமயக் கோட்பாடுபற்றிய தருமவுரைச்சருக்கம் முதலாகப் பூதவாதச்சருக்கம் ஈறாகவுள்ள பத்துச் சருக்கங்களால் ஜைனதருமங்களும் பரசமயவாதங்களும் மறுப்பும் சொல்லப் பட்டுள்ளன.

இந்நூலுக்கு ஜைனசமயமுனிவருளொருவரான வாமனமுனிவர் என்பவரால் செய்யப்பட்ட ஸ்ரீநீலகேசிவிருத்தி சமயதிவாகரம் என்றபெயருடன் ஒரு சிறந்தவுரை வரையப்பட்டிருக்கிறது. அது, இடையே மணிப்பிரவாளநடையையும் வடமொழி தமிழ்மொழி மேற்கோள்களையும் உடையது.

இதனால், பண்டைக்காலத் தொழுகலாறான பலவகைச் சமயக் கோட்பாடுகளி னுணர்ச்சியும் தருக்கவுணர்ச்சியும் கற்பவர்க்கு உண்டாகத்தகுவன.

இந்நூல் எப்பொழுது அச்சாகி வெளிவரும் என்று தமிழறிஞரால் எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இது இப்பொழுது கும்பகோணம் அரசாங்கக்கல்லூரிப் பேராசிரியர் ஸ்ரீமான் சக்கிரவர்த்தியவர்களால் நன்கு பரிசோதித்து அச்சிட்டு வெளியிடப்பட்டிருக்கிறது.

இதனுள், ஜைனசமயக்கோட்பாடுகள் பலவும் நன்கு தெரிந்து கொள்ளுமாறு அஷ்டபதார்த்தசாரம் என்னும் கட்டளைநூல் ஒன்று (மணிப்பிரவாளநடையிலுள்ளது) சேர்க்கப்பெற்றிருக்கிறது.

இந்நூலின் வரலாறு, உரைவரலாறு முதலானவையெல்லாம் நன்குவிளங்கும்படி ஆங்கிலமொழியில் 300 பக்கங்களுக்குமேலும் விரிவாய் ஆராய்ச்சிமுறையில் வரையப்பெற்ற முன்னுரையொன்று இதிற் சேர்க்கப்பெற்றிருக்கிறது.

இவ்வாறு இப்புத்தகத்தை அச்சிட்டு வெளியிட்ட ஸ்ரீமான் சக்கிரவர்த்தியவர்கள், சமயாபிமானமும் தமிழபிமானமும் தோன்றுமாறு தம்முடைய உயர்ந்த கல்வியறிவை உலகிற்குப் பயன்படச்செய்துவருவது மிகவும் பாராட்டத்தக்கது.

இப்புத்தகம் ஒவ்வொரு புத்தகசாலையிலும் உயர்தரக்கலாசாலைகளிலும் இருத்தற் குரியது. 800-பக்கங்களுக்குமேலுமுள்ள இதன் விலை ரூ 5. வேண்டுவோர் பதிப்பித்தவரிடத்திலும் தக்க புத்தகசாலைகளிலும் பெறலாம்.

அச்சத்தன்மைக்கு அச்சமுற்றிரங்கல்.

353. பற்றே தவிர்த்தெமை யாள்வோன் சிராமலைப் பாவைநல்லாள்
சற்றே யொருவர் நொடித்தாற் பயந்து தளர்ந்தயர்வாள்
உற்றே வனத்திடை மேவிடும் போதங் குறுமதமாச்
சுற்றே முழங்கினென் னுங்கொலென் றென்னுயிர் சோர்கின்றதே. ()

கண்டோர் இரக்கம்.

354. பூதி யணிபுயத் தெம்மான் சிராமலைப் பூங்குழலாள்
சோதி மலர்முகங் காணாது பாங்கியர் துன்பமுறக்
கோதி னவமணி யார்கழங் காதியைக் கூர்ந்துகண்டு
பாதி மதிநுதற் றூய்முகம் வாடிப் பதைத்திடுமே. (கசு)

செவிலி ஆற்றாத்தாயைத் தேற்றல்.

355. சேய்க்கு நிகருமொ ரேந்தல்பின் போகின் றிருமகளைத்
தாய்க்கு நிகரென வந்தோன் சிராமலைத் தாணுவொளிர்
வேய்க்கு நிகர்தரு தோளுமை பாகன் விறல்விடையின்
வாய்க்கு ளடங்கிடம் யாவுந் துருவி வருவிப்பனே. (கஎ)

செவிலி முக்கோர்பகவரை வினாதல்.

356. ஒருகோ விருநிலத் தூன்றிமுக் கோலொடு முண்மையினாற்
பொருகோ தெனுமைந்தை யாறூ டகற்றிய பூசுரர்காள்
பெருகோத மார்கடு வுண்டோன் சிராமலைப் பேதைமின்னேய்
வருகோல மோடொரு காளைமுன் னேயிங்கு வந்ததுண்டே. ()

---

353. நொடித்தால் - கையை நொடித்தால். என்னுங்கொல் - என்ன நிலையை அடைவாளோ?

354. பூதி - திருநீறு. கழங்கு - கழற்சிக்காய்; நவமணிகள் இழைத்த கழங்கு.

355. விடையென்றது திருமாலை; 'வாய்க்குள் அடங்கும் இடம்' என்றது உலகமுழுவதையும்; "உலகமுண்ட பெருவாயா" (திவ்.) திருமகளை வருவிப்பன்.

356. ஒருகோல் - ஊன்று கோலை. முக்கோல் - திரிதண்டம். கோது எனும் ஐந்தை - ஐம்புலங்களை; பஞ்சக்கிலேசங்களெனினுமாம். ஆறு - காமம் முதலிய அறுவகைக் கடும்பகை. பெருகு ஓதம் - கடல். கடு - விடம். மின் னேய் - மின்னை ஒத்த. பேதை இங்கு வந்ததுண்டே; ஏ: வினா.

### மிக்கோர் ஏதுக்காட்டல்.

357. அல்லார் தருகளத் தெம்மான் சிராமலை யாயிழையாய்
கல்லார் மணியுறு பொன்னூர் பணிகள் கவின்மருவ
வல்லார் குவிமுலை மீதேய் வறிந்தும் வருந்துவதென்
வில்லார் நுதற்றிரு மாலா மிறையொடு மேவுதற்கே. (கசு)

### எயிற்றியோடு புலம்பல்.

358. அரவ மதியணி யெம்மான் சிராமலை யாயிழைதன்
குரவ ரொடுமெனை யாயத்தை நீத்தோர் குரிசிலன்பு
விரவ நடந்தன ளாலிச் சுரத்திடை மேவினளோ
மரவ மலர்க்குழ லாயுரை யாய்செய்ய வாய்திறந்தே. (உ௦)

### குரவோடு புலம்பல்.

359. அரவே பணியென வாழ்வோன் சிராமலைக் கன்பிலர்போற்
கரவே புரிந்தெழின் மானையோர் கள்வன் கவர்ந்துனெதிர்
வரவே கலிரென வன்னவர் முன்னர்நின் வாய்திறவாக்
குரவே யழகிது பாவையை நீபெறுங் கொள்கையதே. (உக)

---

357. கல்லார் மணி - மலையினிடத்தே தோன்றிய மணிகள்; "கற்பா லுமிழ்ந்த மணியும்" (சீவக. 4.) ஏய்வு அறிந்தும் - பொருந்துதலை அறிந்தும். மலையிற் றோன்றிய மணி தான் தோன்றிய இடத்திலே இராமல் பொன்னூ பரணத்தோடுகூடி மகளிர்மார்பிற் பொருந்தியதுபோல நும்மாற் பெறப்பட்ட தலைவி நும்மிடத்தே இராமல் தலைவனுடன் சென்றது உலகியல்பேயென்பது கருத்து. திரு - தலைவி. மாலாம் இறையொடு திரு மேவுதற்கு வருந்துவது என்?

பி-ம். 'மீதேயணிந்தும்.'

358. குரிசிலின் அன்பு.

359. பணி - ஆபரணம்; அரவே பணி யென்றது ஒரு நயம். கரவு - திருட்டு. ஏகலிர் - செல்லாதீர்கள். அழகிது: குறிப்பு; அழகன்று என்றபடி. குரவு - குராமரம். குரவம்பூ பாவையைப்போ லிருத்தலின் பாவை நீபெறும் கொள்கை என்றார்; "தான்றாயாக் கோங்கந் தளர்ந்து முலைகொடுப்ப, ஈன்றாய் நீ பாவை யிருங்குரவே" (திணைமாலை நூற்றைம்பது, 65); "குரவம் பாவை கொண் டோலுறுத் தாடியும்" பெருங். 2. 14: 19.

சுவடுகண்டிரங்கல்.

360. செவ்வீ ரடியுமை பாகன் சிராமலைச் செந்நெறிவாய்
அவ்வீ ரடியன்பர் நேரடி யாகு மணிதிகழும்
இவ்வீ ரடிவஞ்சி தன்னடி யாகு மிவற்றயலாம்
உவ்வீ ரடிபன் மறவோ ரடியிங் குணர்ந்திடினே. (உஉ)

கலந்துடன் வருவோர்க் கண்டு கேட்டல்.

361. சேயனை யானொடு மேவுமின் னேயன்பர் தேறவருள்
தாயனை யானெனை யாள்வோன் சிராமலைத் தாழ்குழன்மா
லேயனை யானொடு சென்றன ளோசுரத் தேயெனைப்போல்
ஆயனை யான்பிரி கன்றென வாடி யரற்றிடவே. (உ௩)

கலந்துடன் வருவோர் புலம்பல் தேற்றல்.

362. பொன்னே யெழிற்சடை யெம்மான் சிராமலை போற்றுமித்தாய்
இன்னே யிருவ ருமைநிகர் வாரிவ ணெய்தினரோ
முன்னே யெனவுரை யாடினள் கண்டனன் மொய்ம்பனையான்
மின்னே யனையென்கொல் சொல்லிய வாறு விளம்புகவே.(உ௪)

---

360. பாலைநிலம் செந்நிறமாயிருத்தல்பற்றிச் செந்நெறி யென்றார்; "செம்புருக்கி, வார்த்தா லனைய வழிநெடும் பாலை" (தஞ்சை. 267); "அழல் வாய்க்குகையிற், செம்புருக் கிச்சொரிந் தாலன்ன பாலை" (நெல்லைவருக்கக் கோவை, 15.) உ என்பது இடையிலுள்ளவற்றை உணர்த்தும் இடைச்சொல். செய்யுட்குரிய அடிகளுட் சிலவாகிய நேரடி, வஞ்சியடியென்பன இதில் தொனிக்கின்றன.

பி-ம். 'வஞ்சி சீறடி'.

361. மாலே யனையானொடு - திருமாலை ஒத்த ஒரு தலைவனோடு. எனைப்போல் ஆய் - என்னைப்போல ஆராயும். அனை - நற்றாய். ஆன் பிரிகன்றென. அனை அரற்றிட.

362. பொன் ஏய்-பொன்னை ஒத்த. இத்தாயானவள் உரையாடினள். யான் மொய்ம்பனைக் கண்டனன். மின்னேயென்றது தன் மனைவியை. அனை சொல்லியவாறு என்கொல். "மீண்டா ரெனவுவந் தேனும்மைக் கண்டிந்த மேதகவே, பூண்டா ரிருவர்முன் போயின ரோபுலி யூரெனைநின், றாண்டா னருவரை யாளியன் னானைக்கண் டேனயலே, தூண்டா விளக்கனை யாயென்னை யோவன்னை சொல்லியதே" (திருச்சிற். 244) என்பதைப் பின்பற்றி வந்தது இச்செய்யுள்.

புதல்வியைக் காணாது கவலை கூர்தல்.

363. தன்னை நினைப்பவர் தம்மான் சிராமலைச் சாரலில்வாழ்
மின்னை யழற்சுரத் தெங்கணுங் காண்கிலன் மீளினன்னை
என்னை யினித்தனி காணி னிறந்திடு மேங்கியந்த
அன்னை யிறப்பதன் முன்யா னிறப்ப தறனுடைத்தே. (உரு)

உ௬. மீட்சி.

தலைவி சேணகன்றமை செவிலி தாய்க்குணர்த்தல்.

364. மாதார் தருமிடப் பாகன் சிராமலை வாணுதலைத்
தீதார் தருவினை யேனெங்குங் காண்கிலன் றேடியன்னே
போதார் தருதொடை வேயுமோர் வேலவன் பூந்தடந்தேன்
தாதார் தருபொழில் சூழ்தன் னகர்கொண்டு சார்ந்தனனே. (க)

தலைவன் தம்மூர் சார்ந்தமை தலைவிக்குச் சாற்றல்.

365. பின்னுஞ் சடைக்கற்றை யெம்மான் சிராமலைப் பேதைகடம்
துன்னும் பொழுதிளைப் பாறிய காவது தூநெறியே
உன்னுந் தபோதன ராசி யுரைத்த வுழியதுநாம்
மன்னுந் தினைப்புன மீதுநின் செல்வ மனையதுவே. (உ)

தலைவி முன்செல்வோர்தம்மோடு தாம்வரல்
பாங்கியர்க்கு உணர்த்திவிடுத்தல்.

366. ஆறணி செஞ்சடை யெம்மான் சிராமலைக் கார்வமிகும்
நீறணி வேதியர் காளனை நேடி நெடிதயரும்
வீறணி பூண்முலைப் பாங்கியர் தாமகிழ் மேவவரி
ஏறனை யானொடு மெய்தின னீர்சென் றியம்பிடுமே. (௩)

---

363. நினைப்பவர் தம்மான்-நினைப்பவரைப் புரப்பவன். தனி காணின்-தலைவியில்லாமல் என்னைக் கண்டால். இறந்திடும் - இறந்திடுவாள்.

364. தேடிக் காண்கிலன். தேன் தாது ஆர்தரும் - வண்டுகள் தாதை உண்ணுகின்ற. வேலவன் சார்ந்தனன்.

365. பேதை: விளி. கடம் துன்னும்பொழுது - பாலைநிலத்திற் சென்ற காலத்தில். தூநெறியே - நல்லவழியையே. உழி - இடம்.

366. வீறு அணி - வீற்றுத்தெய்வத்தை அணிந்த; 'திரு - முலைமேற் றோன்றும் வீற்றுத்தெய்வம்' (சிலப். 2: 69, அடியார்.); "ஆமணங்கு குடியிருந் தஞ்சுணங்கு பரந்தனவே" (சீவக. 171, ந.) அரியேறு அனையான் - தலைவன்.

முன்செல்வோர் பாங்கியர்க் குணர்த்தல்.

367. அன்றே யெமைத்தடுத் தாண்டோன் சிராமலை யாயமின்காள்
நன்றே மகளிர்க்குக் கற்பெனும் வாய்மை நயந்திருதோள்
குன்றே யனையவொர் காளைபின் போமயில் கூர்ந்தருளால்
இன்றே வருமந்த வேந்துட னீர்நைந் திரங்கலிரே. (சு)

பாங்கியர் கேட்டு நற்றாய்க் குணர்த்தல்.

368. நந்தார் கரன்றொழு நம்மான் சிராமலை நான்மறையோர்
வந்தா னுமது திருமுனங் கானிடை வாரணத்தைச்
சிந்தா வணைத்தருள் சிங்கமொ டிங்கெனச் சென்றுரைத்தார்
எந்தா யுனது தவமெங்கள் பாக்கிய மீதெனவே. (ரு)

நற்றாய் உளங்கோள் வேலனை வினுதல்.

369. நாலா ரணந்தொழு நம்மான் சிராமலை நாடிவரும்
மாலா மவனென் றிருவொடு மென்மனை வைகிடுமோ
சேலார் விழியினைத் தன்மனைக் கேகொண்டு சென்றிடுமோ
வேலா வெனதுளந் தேற வருள்செய வேண்டுவனே. (சா)

## உசு. தன்மனை வரைதல்.

பணிமொழிநற்றாய் மணனயர்வேட்கையிற் செவிலியை வினுதல்.

370. நம்மனை யேயவர் நாடிவந் தெய்தினு நாமிறைவர்
தம்மனை மேவி மகிழ்வுறு மன்னையர் தாம்வரவிங்
கெம்மனை மாமணஞ் செய்வ தியல்பதற் கேய்வனசெய்
அம்மனை யாளிடம் வாழ்வோன் சிராமலை யாயிழையே. (க)

---

367. ஆயமின்காள் - ஆயமகளிரே; மின் - மின்போன்ற மகளிர். வாய்மையை நயந்து. வரும் - வருவாள். அந்த வேந்துடன் - அந்தத் தலைவனுடன்.

368. நும்முடைய திரு வந்தாள். சிந்தா - சிந்தி. சிங்கமென்றது தலைவனை. நான்மறையோர் உரைத்தார். எம் தாய் - எம்முடைய தாயே. சிங்கமொடு நும்முடைய திரு வந்தாள் என நான்மறையோர் உரைத்தார்.

369. வைகிடுமோ - தங்குவாளோ.

370. அன்னையர் - தலைவனுடைய தாய்மார். ஏய்வன - பொருந்துவன. அம்மனையாள் - அத் தேவி. இடம் வாழ்வோன் - இடப்புறத்தே வாழப் பெற்றவன்.

### வரைந்தமை செவிலிக்கு இதுளை உணர்த்தல்.

371. யானே தியம்புவ திவ்வன்னைக் கன்னை யியன்முறையால்
மானே நிகர்விழி பாகன் சிராமலை வாழ்மயிலைத்
தேனே யலர்மண மாலிகை வேய்ந்துதன் சீர்நகர்வாய்க்
கோனே மணந்தன னென்றுவந் தோர்சிலர் கூறினரே. (உ)

### வரைந்தமை செவிலி நற்றாய்க் குரைத்தல்.

372. இந்தமர் வேணிய ரெம்மான் சிராமலை யேத்துமன்பர்
தந்தமர் சூழ்ந்திடத் தம்பதி வாய்மணந் தாம்புரிந்து
பந்தமர் பூண்முலை யாளொடு மீண்டுப் படருமுறை
நந்தமர் போற்றிடு மன்னேமுன் றூதர் நவின்றனரே. (ங)

### தலைவன் பாங்கிக்கு யான் வரைந்தமை நுமர்க்கு இயம்பு சென்றேன்றல்.

373. வேதியர் வாழ்த்தி யவியெரிக் கூட்ட விளங்கிழையை
நீதிய தாமணஞ் செய்துவந் தோமிந்த நீர்மையுமை
பாதியர் மேவுஞ் சிராமலை மீதுன் பயில்கிளைஞர்
ஆதியர் யாவரு மோர்ந்திடக் கூறுக வாயிழையே. (ச)

### தான் அது முன்னே சாற்றினன் என்றல்.

374. நாகம் புனைந்தரு ளெம்மான் சிராமலை நன்னுதலைப்
பூகந் தரளம் பொழிபுன லூர்கொடு போய்க்கிளைமுன்
யாகம் புரிந்தவ ணிமணஞ் செய்தமை யாவுமுனம்
மேகந் திகழ்குழற் றாயர்க்கும் யார்க்கும் விளம்பினனே, (ரு)

---

371. யான் எது இயம்புவது - யான் என்ன சொல்லுவது. இவ்வன்னைக்கென்றது நற்றாயை. அன்னையென்றது தன்தாயாகிய செவிலியை. தேன் ஏய். கோன் மணந்தனன்; ஏ: அசைநிலை.

372. இந்து - சந்திரன். அன்பர் படரும் முறையை நவின்றனர்; படர்தல் - செல்லுதல்.

373. அவி - தேவருணவை. இந்த நீர்மையைக் கூறுக.

374. பூகம்-கமுகமரம். யாகம் புரிந்து-அக்கினிகாரியங்களைச் செய்து. அவண் - அவ்விடத்தில்.

## உரு. உடன்போக்கிடையீடு.

### நீங்குங்கிழத்தி பாங்கியர்தமக்குத் தன்செலவு உணர்த்திவிடுத்தல்.

375. ஆடுந் திருநடத் தெம்மான் சிராமலை யாங்குச்செல்வீர்
நீடுங் கதிர்வடி வேற்பெரு மானுட னேயமுற்றிக்
காடுங் கடந்துவெம் பாலையு நீந்தினள் கற்பினெனல்
வாடுங் கொடியிடைப் பாங்கியர் யார்க்கும் வழங்குமினே. (க)

### தலைவி தன்செலவு ஈன்றாட்கு உணர்த்தி விடுத்தல்.

376. ஓங்கத்த மார்மழு வாளன் சிராமலை யோர்மறையீர்
தாங்கத் தகாவயர் வாலெனைத் தேடித் தளராளைபால்
நீங்கத் தகாவன்பர் தம்முடன் றேர்மிசை நீடிவெப்பம்
வீங்கத்த மார்சுரத் தேகிடு மாறு விளம்புமினே. (உ)

### நற்றாய்க்கு அந்தணர் மொழிதல்.

377. முருந்ததி வாலெயிற் றாளொரு வேளொடு மூளுமன்பு
திருந்ததி காரி யெனச்சுரஞ் சென்றனள் சீர்வடமீன்
அருந்ததி யானதுன் மான்பாலின் கற்பினுக் கன்பருளம்
இருந்ததி யாகப் பிரான்றன் சிராமலை யேந்திழையே. (ங)

---

375. பெருமானுடன் - தலைவனுடன். முற்றி - முதிர்ந்து. எனலை வழங்குமின்.

376. ஓங்கு அத்தம் - உயர்ந்த வலத்திருக்கரம். அயர்வால் - வருத்தத்தால். அத்தம் ஆர் - அருநெறிகள் பொருந்திய. ஏகிடும் ஆற்றை அனைபால் விளம்புமின்.

377. முருந்து அதி வால் எயிற்றாள் - மயிலிறகின் அடிக்குருத்தைக் காட்டிலும் மிக வெண்மையான பற்களையுடைய தலைவி; அதியென்பது வடசொல்லுள் மிகுதிப்பொருளதோ ரிடைச்சொல்; "மதிநுட்ப நூலோ டுடையார்க் கதிநுட்பம், யாவுள முன்னிற் பவை" (குறள், 636.) அதிகாரியென - அதிகாரத்தையுடையவளென்று சொல்லும்படி. சீர் - ஒப்பு. அருந்ததி ஆகிய வடமீன் உன் மான்பாலின் கற்பினுக்கு ஒப்பானது.

### தமர் பின்சேறலைத் தலைவி கண்டுரைத்தல்.

378. வாருறு பூண்முலை பாகன் சிராமலை வாழுமெமர்
சீருறு செங்கதி ரோனெழிற் றேரினைச் சென்றுசுற்றிக்
காருறு மாறெனக் கார்முகத் தாலம்பு காலப்பெய்து
போருறு வானன்பர் தேர்சூழ்ந் தனர்சினம் பொங்கிடவே. (ச)

### தலைவன் தலைவியை விடுத்தல்.

379. வெருவேன் மறவ ரெனினொரு வாளியின் வீட்டியின்பம்
தருவே னினதைய ராமெனி னஞ்சுவன் சார்ந்துவெல்ல
மருவே கமழு மலர்க்குழ லாரளி வாய்ந்தொலிப்பத்
திருவே விரைவுட னெம்மான் சிராமலை சேருகவே. (ரு)

### தமருடன் செல்வோள் அவன்புறம்நோக்கிக் கவன்று அரற்றல்.

380. கான்படர் வேடரைக் காய்ந்தநம் மன்பர்முன் காட்டுமெமர்க்
கூன்படர் வேலொடு பின்காட்டுந் தேர்செல வூர்புரவி
தேன்படர் சோலைச் சிராமலை யீசர் திருவருளால்
வான்படர் பானு மதியுள காலமும் வாழியவே. (சா)

## உசா. வரைதல்.

### தலைவன் வரைந்துழிக் கண்டோர் மகிழ்ந்து கூறல்.

381. குருவே யெனவரு ளானுரு வாயன்பர் கூட்டமுய்த்துக்
கருவே ரறுத்தெமை யாண்டோன் சிராமலைக் காரிகைதான்
திருவே யிவன்றிரு மாலே யெழின்மணச் சீர்மைகண்டிங்
குருவே யிமையவ ரானோ மிமைப்ப தொழிதலினே. (க)

---

378. சூரியன்தேரை மேகம் அம்பு (நீர்) பெய்து சூழ்ந்தாற்போல எமர் அன்பர் தேரைச் சூழ்ந்தனர்; அம்பு: சிலேடை.

379. மறவரெனின் வெருவேன்; மறவர் - பாலைநிலத்தவர். உன் தமையன்மாராகிய வேடர்களாயிருந்தால் சார்ந்துவெல்ல அஞ்சுவன். குழல் ஆர் அளி - கூந்தலில் ஆர்ந்த வண்டுகள்.

380. வேடரை முன்பு காய்ந்த நம் அன்பர்; இஃது உடன்போக்கின் கண் முன்பு நிகழ்ந்த செய்தி. "உவ்வீ ரடிபன் மறவோ ரடியிங் குணர்ந் திடினே" (359) என்றார் முன்னும். "மன்போரி னுண்மைக் கிடைந்தோடி னாடி மாவடியே" (குலோத். கோவை, 395.) புரவிகள் வாழிய.

381. கூட்டம் உய்த்து - கூட்டத்தில் அடியேனைச் செலுத்தி. உரு எய் - அழகு பொருந்திய.

அணி:—இப்பாட்டில் வழியெதுகையென்னும் அநுப்பிராசம் பெரும்பாலும் வந்துளது காண்க. கடிபடுதனத்தினளாயும் பெற்றதாய் சுதனை உவந்தமுதூட்டிவளர்க்குமென்னும் பொதுப்பொருளால் என்றனைக் காத்தருளுதல் பொறையுருவான உனக்குத் தகுமெனச் சிறப்புப்பொருள் சாதிக்கப்பட்டிருத்தலால் இது வேற்றுப்பொருள்வைப்பணியாம். "பொதுவாற் சிறப்புஞ் சிறப்பாற் பொதுவும், புகறல் வேற்றுப் பொருள்வைப் பணியே" என்பர் சந்திராலோகநூலார். "முன்னொன்று தொடங்கி மற்றது முடித்தற்குப் - பின்னொரு பொருளை யுலகறி பெற்றி, ஏற்றிவைத் துரைப்பது வேற்றுப்பொருள் வைப்பே" என்பர் தண்டியாசிரியர். (உஎ)

[இவ்விருபத்தேழுபாடல்களும் ஆசிரியவுரிச்சீரானே வந்த எழுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தங்கள். ஆசிரியவுரிச்சீர்:—நேர்நேர் - தேமா. நிரைநேர் - புளிமா. நிரைநிரை - கருவிளம். நேர்நிரை - கூவிளம். இவைகளாம்.

ஆசிரியத்தளை:—நேர்முன் நேர்வருவது நேரொன்றாசிரியத்தளை; நிரைமுன் நிரைவருவது நிரையொன்றாசிரியத்தளை. இவ்விருபத்தேழு பாட்டிலும் இவ்வாசிரியத்தளையன்றி மாமுன்னிரையும் விளமுன்னேரும் வரும் வெண்டளையும் விரவிவந்தமை காண்க.]

28. இந்திர நீல மணியினீ னிறத்தா
ளெழில்கொள்கல் லாரவண் கரத்தாள்
அந்தன பரத்தால் வணங்கிடு மெய்யா
ளரும்பெருங் கருணையங் கடலாள்
குந்தள வாச வாசிகை வசமாக்
கொண்டருள் கொழுநனை யுடையாள்
செந்தமிழ்ப் புதுவை யந்தணன் புதல்வி
சிறந்தில குகநம துளத்தே.

பதவுரை:—இந்திரநீலமணியில் நீல் நிறத்தாள் - சதமகமணிபோலே விளங்குகின்ற நீலமான தேககாந்தியையுடையவரும்; எழில்கொள் கல்லார வண் கரத்தாள் - அழகமைந்த செங்கழுநீர்மலரையேந்திய அழகிய திருக்கையையுடையவரும்; அந்தனபரத்தால் வணங்கிடு மெய்யாள் - அழகிய தனபாரங்களைப் பரிக்கிறதினாலே சிறிது வளைந்துதோன்றும் திருமேனியையுடையவரும்; அரும் பெருங் கருணையங்கடலாள் - பிறர்களுக் கடைதற்கருமையான பெருமைமருவிய கிருபாசமுத்திரமாயிருப்பவரும்; குந்தளம் -

திருக்குழற்கற்றையிற் சூட்டிய; வாசம் - பரிமளம் பொருந்திய; வாசிகை வசமா - திருமாலைகளாலே தமக்குச் சுவாதீனனாகச் செய்யப்பட்ட; கொழுநனையுடையாள் - நாயகனையுடையவளுமாயிருக்கிற; செந்தமிழ்ப் புதுவையந்தணன் புதல்வி - செவ்விய தமிழ் சிறந்துவிளங்குதற்கிடமான ஸ்ரீவில்லிபுத்தூரில் திருவவதரித்தருளிய பெரியாழ்வாரது திருமகளாராகிய கோதை சூடிக்கொடுத்தருள்நாய்ச்சியார்; நமது உளத்தே - அடியார்களாகிய நம்முடைய இதயகமலத்திலே; சிறந்திலகுக - சிறப்பாக வீற்றிருந்து விளங்கக்கடவர் எ—று. ஏ - ஈற்றசை.

**கருத்து:—**ஸ்ரீவில்லிபுத்தூரிலே திருவவதரித்தருளிய பெரியாழ்வார் திருமகளாராகிய கோதைசூடிக்கொடுத்தருள்நாய்ச்சியார், இப்பொழுது இந்தத் திவ்வியதேசத்திலே திருவுளமுவந்து சேவைசாதித்தருளியது போலவே சர்வதேச சர்வகால சர்வாவஸ்தைகளிலும் நம்முடைய இதயத்திலே வீற்றிருந்து விளங்கிக்கொண்டிருந்தருளவேணு மென்பதாம்.

**விசேடக்குறிப்பு:—**கொழுநனையென்பதற்குச் செழித்த அரும்பு என்றும், மிகுந்த தேன் என்றும் பொருளுண்மையில் வாசிகைவசமாக்கொண்டருள் கொழுநனையுடையாளென்பதிற் சப்தசமத்காரமுண்மை யோர்க.

இப்பாட்டும் முன்கூறிய உஎ பாடல்கள்போலே அடியடிதோறும் எழுசீர்வந்து இயற்சீரும் ஆசிரியத்தளையும் வெண்டளையும் அமைந்து வேறு சீரும் தளையும் விரவாதிருப்பினும் ஓசைவேறுபாடுண்மை யோர்ந்துணர்க.

பொருள் வெளிப்படையாய் விளங்குதலில் இப்பாட்டும் தெளிவென்னுங் குணமுடையதேயாம்.

இப்பாட்டு, நாய்ச்சியார் சமரபூபாலனில் எழுந்தருளியிருக்குமியல்பை நேரே கண்ணாற்கண்டாற்போல உள்ளவாறுணர்த்தும் சொற்களாலே முறையே தொடுக்கப்பட்டிருத்தலால் தன்மைநவிற்சியணியாம். "எவ்வகைப் பொருளையும் மெய்வகை விளக்கும், சொன்முறை தொடுப்பது தன்மையாகும்" என்பர் தண்டியாசிரியர். "அதுவே, பொருள்குணஞ் சாதி தொழிலொடுபுலனும்" என்பர் பின்னும். "மேவியசாதி வினைகள தியற்கைத்-தன்மை யுரைப்பது தன்மை நவிற்சி" என்பர் சந்திராலோகநூலார். இது "நீல மணிமிடற்றன் நீண்ட சடைமுடியன்" என்பதுபோன்ற பொருட்டன்மைநவிற்சி. (உஅ)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

29\. தென்புதுவை யந்தணர்த நந்தனவ நந்தனில்வ
ளர்ந்ததுள வந்த னில்வரும்
பொன்பதயு கம்பரவு மன்பனுளி ருந்துவெளி
பொங்குதுதி யின்ற மிழிதை
யன்பொடுப கர்ந்துதுதி முன்பரெவ ரிங்கவர்க
ளந்திருவ ரங்க னருளால்
மன்புகழு மின்பமும மைந்துபின்வை குந்தமெனும்
வண்பதியி லின்பு றுவரே.

இது, இந்தப்பிரபந்தத்தை யன்போடு கற்றுணர்வார் பெறும் பயன் கூறுகிறது.

பதவுரை:—தென்புதுவையந்தணர்தம் நந்தனவனந்தனில் - ஸ்ரீவில்லிபுத்தூருக்கு நிர்வாஹகரான பெரியாழ்வாரது திருநந்தனவனத்தில்; வளர்ந்த - தோன்றி விருத்தியடைந்திருக்கும்; துளவந்தனில் - திருத்துழாய்மூலத்தில்; வரும் - திருவவதரித்தருளிய; பொன் பதயுகம் பரவும் - பொன்போன்ற கோதைசூடிக்கொடுத்தருள்நாய்ச்சியார் திருவடித்துணைகளைத் துதிக்கும்; அன்பன் உளிருந்து - பக்தனை வேங்கடேசதேசிகனது திருவுள்ளத்திலிருந்து; வெளிபொங்கு (நாய்ச்சியாரது அநுக்கிரகத்தினாலே) வெளியே பிரவகிக்கிற; துதியின் தமிழ் இதை - கோதாஸ்துதியின் மொழிபெயர்ப்பு நூலாகிய சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலையென்னும் இந்தத் தமிழ்ப்பிரபந்தத்தை; அன்பொடு - பிரீதிபூர்வகமாக; பகர்ந்து - பாராயணஞ்செய்து; துதி - கொண்டாடுகின்ற; முன்பர் - பெரியோர்; எவர் - யார்; அவர்கள் - அம்மகாநுபாவர்கள்; இங்கு—இந்த நிலவுலகத்திலே; அம் திரு அரங்கர் அருளால் - அழகிய ஸ்ரீரங்கராஜனது கிருபையினாலே; மன் - நிலைபெற்ற அல்லது மேலான; புகழும் - கீர்த்தியையும்; இன்பமும் - சுகஹேதுக்களான சகலசௌபாக்கியங்களையும்; அமைந்து-பெற்றுச் சிரஞ்சீவிகளாக வாழ்ந்திருந்து; பின் - பின்பு - (அதாவது தேகாவசானத்தில்); வைகுந்தம் எனும் வண்பதியில் - ஸ்ரீவைகுண்டமென்னும் திவ்வியலோகத்திலே; இன்புறுவர் - நித்தியாநந்தபரிதராய் வாழ்ந்துகொண்டிருப்பார்கள் என்றவாறு; ஏ - ஈற்றசை. (உகூ)

சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை
மூலமும் உரையும் முற்றும்.

ஸ்ரீ ஆண்டாள் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

# பிழையும் திருத்தமும்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 27 | 27 | சாபராதிகள் | சாபராதர்கள் |
| 31 | 16 | மெந் நதியில் | மந் நதியில் |
| ,, | 25 | எந்நதியில் | அந்நதியில் |
| ,, | 26 | யாதொரு | அந்தக் |
| 32 | 4 | யாதொரு | அந்தக் |
| 36 | 18 | யெமக்கென்று) | யெமக்கெமக்கென்று) |
| ,, | 30 | எமக்கென்று | எமக்கெமக்கென்று |
| 37 | 21 | பாத்தனர் | பகர்ந்தனர் |
| 41 | 13-14 | சர்வசக்தியையு முடைய திருவிக் கிரமரூபியான | சர்வசக்தியை யுடைய |
| 42 | 14 | ஆவியாற் | கவியாற் |